Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 382/2025** |
| Deposition of witness for | :: | **PW. 5** |
| **Name** | :: | **சங்கர் ( காவல் ஆய்வாளர் )** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**15.06.2026**
**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கூமாபட்டி காவல் நிலையத்திற்கு பணிமாறுதல் செய்யப்பட்டுள்ளேன். கடந்த 19.06.2025ம் தேதி 22.00 மணிக்கு அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் கணேசன் அவர்கள் நிலைய ரோந்து பணியில் இருந்தபோது அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று மேற்படி மருத்துவமனை சென்று விசாரிக்க விபத்தில் காயமடைந்து சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த சரவணசாஸ்தா என்பவர் மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக விபரம் தெரிந்து பின்னர் விருதுநகர் மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சரவணசாஸ்தா என்பவரை பார்த்தும் அவருடன் இருந்த செந்தில்குமார் என்பவரை விசாரித்துபோது காலையில் புகார் அளிப்பதாக சொன்னதால் மீண்டும் ரோந்து அலுவலுக்கு சென்றுள்ளார்.

2. பின்னர் மறுநாள் 20.06.2025ம் தேதி காலை 06.00 மணிக்கு மீண்டும் விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று

சரவணசாஸ்தாவின் உறவினர் செந்தில்குமார் என்பவர் கொடுத்த புகார் மனுவினை பெற்று 08.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 121/2025 பிரிவுகள் 281, 125(a) BNS ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர் மேற்படி அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

3. பின்னர் அன்றைய தினம் காலை 09.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான அருப்புக்கோட்டை – திருச்சுழி ரோடு காந்திநகர் தீயணைப்பு நிலையம் அருகில் சென்று சாட்சிகள் அஜீத், கருப்பசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **( மாதிரி வரைபடம் ஆ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின்னர் அன்றைய தினம் புகார்தாரர் செந்தில்குமார், சாட்சி வளர்மதி, சத்யா (எ) சக்திக்குமார், இளங்கோவன் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான அஜீத், கருப்பசாமி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பின்னர் வழக்கின் விசாரணையில் சம்பவம் உண்மையென தெரிய வந்து எதிரியை தேடி வந்த நிலையில் 23.06.2026 ம் தேதி 11.00 மணிக்கு காவல் நிலையத்தில் ஆஜரான இவ்வழக்கின் எதிரியான குமார் என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து குற்றமானது பிணையில் விடக்கூடிய குற்றம் என்பதால் தக்க இருநபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

6. பின்னர் 26.06.2025 ம் தேதி இவ்வழக்கின் விபத்து ஏற்படுத்திய லாரியின் உரிமையாளரான அருண்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கு விபத்தை ஏற்படுத்திய TN 52 B 3434 என்ற பதிவெண் கொண்ட லாரியை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தியுள்ளார்.

7. பின்னர் 03.07.2025 ம் தேதி இவ்வழக்கு விபத்தில் காயம்பட்டு விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சரவணசாஸ்தா என்பவர் சிகிச்சை பலன்இல்லாமல் அன்றைய

தினம் 14.05 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைக்க பெற்ற தகவலின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 281, 125(a) BNS ல் இருந்து 281, 106(1) BNS ஆக பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். ( **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக எனது வசம் ஒப்படைத்த வழக்கு கோப்பினை பார்வையிட்டு மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

8. பின்னர் சம்பவ இடம் சென்று பார்வையிட்டதில் சார்பு ஆய்வாளர் தயார் செய்து வைத்திருந்த பார்வை மகஜர், மாதிரி வரைபடம் சரியாக இருந்ததால் நான் தனியாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை. பின்னர் சாட்சிகளை விசாரணை செய்ததில் அவர்கள் சார்பு ஆய்வாளரிடம் கூறிய சங்கதிகளையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை,

9. பின்னர் அன்றைய தினம் விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று இவ்வழக்கு விபத்தில் காயம்பட்டு இறந்துபோன சரவணசாஸ்தா என்பவரின் பிரேதத்தை பார்வையிட்டு காலை 09.00 மணி முதல் 11.00 மணி வரை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**10.** பின்னர் இறந்துபோன சரவணசாஸ்தாவின் இறப்பிற்கான உண்மை காரணம் அறியும் பொருட்டு பிரேத கூறாய்வு செய்ய வேண்டி தலைமை காவலர் சங்கர் மூலம் விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரி மருத்துவமனை அலுவல் அதிகாரிக்கு தக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்னர் பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தை நல்லடக்கம் செய்வதற்காக அவரது உறவினர்களிடம் ஒப்படைத்தேன்.

11. பின்னர் அன்றைய தினம் புகார்தாரர் செந்தில்குமார், சாட்சிகள் வளர்மதி, இளங்கோவன் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன்.

12. பின்னர் 17.07.2025ம் தேதி இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் கட்ட விசாரணை மேற்கொண்ட சார்பு ஆய்வாளர் கணேசன் மற்றும் பிரேத பரிசோதனைக்கு உடன் சென்ற தலைமை காவலர் சங்கர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

13. பின்னர் அன்றைய தினம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கு விபத்தில் காயம்பட்டு இறந்துபோன சரவணசாஸ்தாவிற்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்த மேற்படி மருத்துவமனை மருத்துவர் நிஷாந்த் அவர்களை விசாரித்து விபத்து பதிவேடு பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். **( அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை விபத்து பதிவேடு அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

14. பின்னர் 31.07.2025 ம் தேதி இவ்வழக்கு விபத்தில் இறந்த நபரான சரவணசாஸ்தா என்பவர் ஓட்டி வந்த TN 67 BW 9754 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தினேன்.

15. பின்னர் 02.09.2025ம் தேதி இவ்வழக்கு விபத்திற்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்து விபத்தாய்வு அறிக்கை வழங்கிய அருப்புக்கோட்டை வட்டார மோட்டார் வாகன ஆய்வாளர் கண்ணன் அவர்களை விசாரித்து விபத்தாய்வு அறிக்கைகள் பெற்று ஆய்வாளரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். **( TN 52 B 3434 என்ற பதிவெண் கொண்ட லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.8 ஆகவும் TN 67 BW 9754 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

16. பின்னர் அன்றைய தினம் விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று இவ்வழக்கில் இறந்துபோன சரவணசாஸ்தாவின் பிரேதத்தை பிரேத கூறாய்வு செய்த மேற்படி மருத்துவ கல்லூரி பேராசிரியர் வெங்கடேஷ்பிரசன்னா அவர்களிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். ( **பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேலும் மேற்படி மருத்துவமனையிலேயே இவ்வழக்கு விபத்தில் காயம்பட்ட

சரவணசாஸ்தாவிற்கு மேல்சிகிச்சை அளித்தது மற்றும் மேற்படி சரவணசாஸ்தா இறந்துபோனதை பற்றியும் மருத்துவர் அப்துல் சுக்கூர் இம்தத்துல்லாஹ் அவர்களை விசாரித்து விபத்து பதிவேடு பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். **(விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை விபத்து பதிவேடு உண்மை நகல் அசாஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**11.** பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி குமார் மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS வின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. முதல் தகவல் அறிக்கை வரிசை எண். 8 ல் புகார்தாரரால் தான் காலதாமதம் ஏற்பட்டது என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எதற்காக புகார்தாரர் காலதாமதத்துடன் புகார் கொடுத்தார் என்று குற்ற இறுதி அறிக்கையில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன சரவணசாஸ்தா விபத்து ஏற்பட்டு ஒரு வாரம் கழித்துதான் இறந்துபோனார் என்றால் சரிதான். இவ்வழக்கில் இறந்துபோன சரவணசாஸ்தாவிடம் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான்.

2. விபத்து ஏற்பட்ட அன்று மேற்படி சரவணசாஸ்தா தலைகவசம் எதுவும் அணியவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட இடமானது வாகன போக்குவரத்து அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். மேற்படி சம்பவ இடத்தில் அடிக்கடி வாகன விபத்து ஏற்படும் காரணத்தினால் ரோட்டின் கிழக்கு மற்றும் மேற்க பகுதிகளில் வேகத்தை குறிக்கும் வெள்ளைகோடுகள் அமைக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தின்போது மேற்படி சரவணசாஸ்தா மேற்கிலிருந்து கிழக்காக பயணம் செய்தார் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட சம்பவ இடத்திலிருந்து தெற்கு பக்கமாக பிரிவு சாலை உள்ளது என்றால் சரிதான்.

3. விபத்தில் சிக்கிய இரண்டு வாகனத்திலும் வலது புறம் தான் சேதம் காணப்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த இடமானது கிழக்கு பக்க சாலையில் வெள்ளை கோட்டிற்கு வலதுபுறமாக தான் ஏற்பட்டது என்றால் சரிதான். சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 னிடம் சார்பு

ஆய்வாளர் அவர்கள் புகார் மனுவைப்பெற்று வழக்கினை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் சொன்ன நாள் நேரத்தில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் சார்பு ஆய்வாளர் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. இவ்வழக்கில் இறந்தநபர் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தி மருத்துவ அறிக்கைகள் மட்டும் தான் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும், ஆவணங்களின் அடிப்படையில் தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்த சாட்சிகளை நான் முறையாக மறுவிசாரணை செய்யாமல் ஏற்கனவே தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சரிவர பரிசீலனை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**